மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ புரட்டாதி 1989 ★ இதழ் — 165

# தேரூரும் தேவி திருவருள் கிடைப்பதாக

**தெல்லிக்கிராமம் என்றும், தெல்லியூர் என்றும், தெல்லிநகர் என்றும் வழங்கிய தெல்லிப்பழை; மிகப்பழைய கோயிற்பற்று.**



முப்பத்திரண்டு கோயிற்பற்றுகளில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரை வெகுவாகக் கவர்ந்த இடம். அன்று 1816 ஆம் ஆண்டளவில் அமெரிக்க மிசனரிமார் பெரிதும் மிகவும் விரும்பிக் கல்விப்பணிபுரிய முயற்சியெடுத்த இடமுமாம்.


தெல்லிப்பழை முன்னரே சைவத்தமிழ்ப் பண்ணையாய்ச் சைவம் வளர்த்த சான்றோரையும், செந்தமிழ் வளர்த்த செம்மல்களையுமுடையதாய் நிலவியது,

பென்னம்பெரிய புலவர்கள் போற்றிய புரவலர்கள் வாழ்ந்த இடமுமாம். கோயிற் கடவை என்னும் பெயர் பெற்ற சூழலிணணித்தாய இடமுமாம்.

அன்றே அடியவர்களை ஆட்கொண்டருள்புரிந்து வந்த அன்னை துர்க்காதேவி இன்று தான் எழுந்தருளிய ஆலயத்தை மையமாகக் கொண்டு கோயில் நகராகக் துர்க்காபுரமென வழங்க எழுந்தருளியுள்ளாள். நகரம் என்பதே கோயிலென்றும் கருத்தாதலின், அவள் பெயரால் நகரம் அமைய, அவள் அடியார்களுக்கு வாழ்வளிக்கும் வண்ணமும் அளவில்லாததாகி வருகிறது. அம்பிகையின் திருவருள் கிடைப்பதற்கு அவளுடைய செம்பதுமத் திருவடிகளை வணங்குவோமாக.

★ ஞானியின் வாழ்வில் ஈசன் மகிமை புலனாகும் ★

உ
சிவமயம்



## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

### திருவாரூர்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்**
**அறக்கணென் னத்தரும் அடிகள்ஆ ரூரரை**
**மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்**
**உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே.**

திருச்சிற்றம்பலம்

பறக்கும் திறமுடைய கிளிகளே, பாடும் இயல்புடைய நாகணவாய்ப்புட்களே, அறத்துக்குத் தலைவராய இறைவனை நான் ஒரு போதும் மறக்க முடியாமையையும், காதல் வயப்பட்டதால் உடம்பு மெலிய என்கைவளைகள் கழன்று விழுவதையும், நான் கண்ணுறக்கம் இல்லாமல் துன்பப் படுவதையும் என் பொருட்டு அவருக்குச் சொல்ல வல்லீரோ.



## பகைமாட்சி

**அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.**

ஒருவன் தன் சுற்றத்தவரிடம் அன்பு இல்லாதவனாய் தக்கதுணை இல்லாதவனாய், தானும் வழியில்லாதவனாய் இருந்தால். தன் பகைவனின் வலிமையை எவ்வாறு தொலைப்பான்?

## DEALING WITH ENEMIES

He who has no affection, has no staunch allies and is weak in himself - how can he subdue the might of his enemy?



## நாங்கள் பெரியவர்கள்


எங்கள் வாழ்வை மலர்த்தி, வலுப்படுத்திச் சிறப்பிப் பனவற்றுள் கோயில் வழிபாடும் ஒன்று. இதைத்திருக் கோயில் வழிபாடு என்று கூறுவர். கோயில் என்பது உயிர்க் குயிராய இறைவன் எழுந்தருளியுள்ள இடம். அன்றி ஆன்மாக்களாய உயிர்கள் லயப்படுகின்ற அமைதியான இடமுமாம்.

கோயிலை ஆலயம், நகரம், கோட்டம் முதலிய பெயர் களாலும் வழங்குவர். கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் எனக்கற்பித்தவர் ஆலயம் தொழுவது சாலவு நன்று என்பர். ஆலயம்தானும் அரனெனத் தொழுபவர்- திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனிதன்னைச் சிவனெனவே நினைந்தவர்க்குச் சிவனுறைவனுங்கே என்பர்.

திருக்கோயில் அமைந்துள்ளமையைத் தூரத்திலே காட்டி நிற்பது கோபுரம். கோபுரம் உயரமாய் ஓங்கி யுயர்ந்து நிற்பது. அது தூலலிங்கம் எனவும் வழங்கும். அதை வணங்குவதால் பாவ விமோசனமும், கோடிபுண் ணியமும் உண்டாகும்.

ஆலயத்தில் ஆதிமூலம் என்னும் கர்ப்பக்கிருகத்தில் உள்ள திருவுருவம் இதயத்தில் உள்ள இறைவனையே குறிப்பதாகும். ஆதிமூலத்தின்மேல் அமைந்து குவிந்திருக் கும் அமைப்பு விமானம் எனப்பெயர்பெறும். அவை நாகரம், திராவிடம், வேசரம் என மூவகைப்படும். பழைய காலத்தில் விமானங்கள் கோபுரங்களைப்போன்று உயர மாக அமைந்திருந்தன. பிற்காலத்துவந்த கோபுரங்கள் நாளடைவில் உயரமுள்ளனவாயின.

**இறைவனுடைய மகிமை ஆதி அந்தமில்லாதது**



## அதிகமான நூல்கள் ஆக்கியவர்

பனழய காலத்தில் சேக்ஸ்பியர் பல நூல்கள் செய்தவர். ஜோர்ச் பேணுட் ஷோ அதிகமான நூல்கள் செய்தவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை பல தலடராணங்களும், பிரபந்தங்களும் செய்தவர். கலாயோகி ஆனந்தக்குமாரசாமி பல நூல்களும் கட்டுரைகளும் செய்தவர். உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் பல பிரபந்தங்கள் செய்தவர். சுத்தானந்த பாரதியார் மிகப் பலவாய நூல்கள் செய்தவர். இன்னும் நாமறியாப் புலவர்கள் பலர் எழுதிக் குவித்துள்ளார்கள். சிந்திப்பதும் எழுதுவதும் கொடைவளத்தாலாவனவாகும்.

இமயசோதி சிவானந்தகுரு, வைத்தியம் சார்ந்தவை, மருத்துவம் சார்ந்தவை, இயற்கை சம்பந்தமானவை, ஒழுக்கம் சம்பந்தமானவை, தர்மம் சம்பந்தமானவை, சனாதனம் சம்பந்தமானவை, நாகரிகம் சம்பந்தமானவை, யோகம் சம்பந்தமானவை, கலாச்சாரம் சம்பந்தமானவை, உணவு சம்பந்தமானவை, வேதாந்த சித்தாந்த மிருசைவத்துறை சம்பந்தமானவை, சிறுவர்களுக்கானவை, இளைஞர்களுக்கானவை, நங்கையர்களுக்கானவை என்றெல்லாம் எழுதிக் குவித்தவற்றை இதுவரை இராசிபுரத்தார் எண்ணியிருக்கலாம். எம்மால் எண்ணமுடியவில்லை. எத்தனை நூறென்று நாமறியோம். அத்தனையும் எழுதிய சுவாமிகள் தனிப்பல்கலைக் களஞ்சியம் எழுதியவராயினர்.

## ஒல்லாந்து தேசம்

ஒல்லாந்தர் என்றும் உலாந்தாக்கள் என்றும் நம்மவர் வழங்கிய ஹொலன்டேர்ஸ், ஹொலண்ட் என்னும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

அவர்கள் முற்காலத்தில் கடற்படை வலிமையினால் தூரதேசங்களைக் கைப்பற்றி ஆண்டவர்கள். இலங்கைக் கரைநாடுகள், தென்னுபிரிக்கா இந்தோனேசியா முதலான நாடுகளெங்கும் அவர்களின் செல்வாக்கு மிக்கிருந்தது.

இலங்கைக் கரைநாடுகள் என்னும்போது வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு மாகாணங்கள் உட்படப் பெருநிலத்தை அவர்கள் 1658 முதல் 1796 வரை ஆண்டார்கள்.

அவர்கள் ஆட்சிக்காலத்தில் தாவரங்கள் பலவற்றை இங்கே பழக்கினார்கள். முருங்கை, புகையிலை, மரவள்ளி வற்றாளங்கிழங்கு அன்னமின்னு முதலியவற்றையும் உடைவகைகள், உணவுவகைகள், பழக்கங்கள், பல சொற்கள் மக்கள் பெயர்கள், இடப்பெயர்கள், புரட்டஸ்தான்மதம் சட்டட அமைப்பு கோட்டைகள் முதலியனயாவும் அவர்களின் உபகரிப்புகளேயாம்.

யாழ்ப்பாணத்தீவுகள் யாவுக்கும் அவர்கள் தங்கள் நாட்டு இடப்பெயர்கள் வழங்கியுள்ளார்கள். ஆரம்பத்தில் சில கெடுபிடிகள் செய்தபோதிலும் பிற்காலத்தில் சிலபல சுதந்திரங்களை அளித்தார்கள். சைவச்சடங்குகளை கட்டுப்படுத்தியதோடு பெரும் பணுவானவர்களையும் சுமத்தினார்கள். அவற்றைப்பற்றி மில்க்வைற் செய்தி இதழ்கள் முன்னரே பிரசுரித்துள்ளன.

முற்காலத்திலே கடல்புறக்கோட்டிய செல்கெழு குட்டுவன் என்பான், கடலை விலகிப் போகுமாறு செய்தமையும் பாண்டியன் ஒருவன் வேலெறிந்து கடலைச் சுவறச் செய்தமையும் தமிழர் வரலாறு. பாண்டியன் வடிவேலெறிந்தவன் பகைபொருத காரணமாகவே தான் அந்தக் கடல் பிரவாகித்து பஃறுளியாற்றுப் பன்மலை அடுக்கங்களையும் குமரிக்கோட்டையும் அது கொண்டது என்பர், அதனுலேயே தமிழ் நாட்டிலிருந்து ஈழநாடு துண்டிக்கப்பட்டது.

தற்கால வரலாற்றில் கடலை நிரப்பி நாடுகண்ட பெருமை ஒல்லார்தருக்கே உரியது. ஒல்லாந்தில் மூன்றில் ஒருபாகம் கடலிலிருந்து பெறப் பெற்ற நிலமாகும் என்னின் முயற்சி செய்தால் ஏதுதான் முடியாது என்று கருதவேண்டும்.

ஐரோப்பாவிலிருந்து வடகடலில் சங்கமிக்கும் றைன் மியூஸ், செல்ட்ற் முதலான ஆறுகள் கொண்டு சென்று குவித்த மண்வீண் போகவில்லை. அந்த மண்ணை ஒல்லாந்தர் பயன்படுத்திக் கொண்டனர். கடல் மட்டத்திற்கும் கீழாகவுள்ள தங்கள் நாட்டை மதில்கள் கட்டிக் காப்பாற்றியுள்ளார்கள். இன்றும் கூட நான்கு ஆற்றுப் படுக்கைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒல்லாந்தர் பஞ்சபூதங்களுள் நிலம் நீர் ஆகியவற்றை ஆட்கொண்ட அற்புதவரிசையில் காற்றையும் ஆட்கொண்டு ஏவல் செய்யப்பணித்தனர். காற்றாடி மூலம் கடல் நீரை எப்பால் இறைத்துத் தள்ளியமை அவர்களின் அற்புத சாதனையாகும்,

ஒல்லாந்தரின் நாளாந்த வேலைகளுள் வீதியோரங்களில் நிழல் தரு மரங்கள் நாட்டி அழகு செய்தல் ஒன்று. உல்லாசப் பிரயாணிகள் உணர்ச்சியோடு கண்டுகளிக்கும் மரங்களின் வரிசையே வரிசை.

ஒல்லாந்தின் தலைநகராய ஆம்ஸ்ரடாம், வைரம் வைடூரியம் முதலான இரத்தினக்கற்களின் வர்த்தக மையம். றைன் நதி மூலம் வாய்க்கால்கள் அமைத்து வள்ளமோட்டி வர்த்தகம் செய்த அந்த அனுபவம் கொண்டே அவர்கள் எங்கள் நாட்டிலும் நீர்கொழும்பிலிருந்து கொழும்புவரை அற்புதமான வாய்க்கால்கள் அமைத்து வள்ள மோட்டினார்கள்.

ஒல்லாந்து தேசத்துக்கு ஒரு வரலாற்றுப் பெருமையும் உண்டு. இங்கிலாந்தில் ஸ்ருவாட் மன்னர் பரம்பரை முற்றாக அற்றுப் போன ஒரு சமயம் அப்பரம்பரையில்

(தொடர்ச்சி மறுபக்கம்)

( 3 ம் பக்கத்தொடர்ச்சி )


வந்தமேரி என்பாள், ஒல்லாந்தில் திருமணஞ் செய்திருந் தாள். ஆங்கிலேயர், அவளை அரசாள வருகவென வர வேற்றபோது அவள் தன் கணவனையும் வாருங்கள் என வேண்டிநின்ருள். நான் என் மனைவியின் பிரசையாக வாழ விரும்பவில்லை என்று அவன் விவேகமாக விடை பகர்ந்ததைக் கேட்ட வெள்ளையர் வியந்து, அரசற்குரிய இரண்டு முடிகள் செய்து கணவனையும், மனைவியையும் விலியம்மேரி என இளையரசு செய்ய முடிசூட்டினுர்கள்.

அந்தப் பரம்பரையில் வந்த ஒருபெண் ஜேமனியில் திருமணஞ் செய்து, அழைத்துவந்தவரே முதலாம் ஜோர்ச் அவர் வழிவந்தவரே எலிசபெத் II.

# செப்ரம்பர் மாதத்துக்குச் சிறப்பு



ஆண்டுதோறும் ஒன்பதாம் மாதமாக உதயமாகும் செப்ரம்பர் மாதத்துக்குரிய பல சிறப்பு நிகழ்ச்சிகள் உள் ளன. உலகைத் துறந்து உள்ளத் தூய்மையோடு இமய மலையடிவாரத்தைச் சேர்ந்து இந்து நாகரிகம் பரப்பிய சிவானந்தர் என்னும் டாக்டர் குப்புசாமி அவர்கள் தோன்றியநாள்.



சுதந்திர தாகத்தைத் தமிழ்க்கவிகளில் ஆவேசமாகப் பாடிய சுப்பிரமணியபாரதியார் அமரராயநாள். உலகத் தமிழ் ஆராய்ச்சியை ஆரம்பித்த தனிநாயக அடிகளார் நினைவுநாள். கப்பலோட்டிய துணிவிற்காக ஆங்கிலேயர் அவரைச் சிறையில் தள்ளிச் செக்கிழுக்க வைத்த சிதம் பரனுரின் நினைவுநாள்.

உலகமெல்லாம் கலை என்ருல் என்ன என்று விளக் கம் பெற முப்பதாண்டுக்காலம் அமெரிக்காவில் உறைந்து சிவநடனம் முதலிய நூல்களை எழுதிய ஆனந்தகுமார சுவாமி என்னும் கலாயோகியரின் அமரத்துவநாள்.



கலாயோகியாரின் மைத்துனருள் இளையவராய சேர் அருணுசலம்,இலங்கையின் தேசபிதாவாயிருந்து சுதந்திரம் அவசிய தேவை, பல்கலைக்கழகம் மிகவும் அவசியம் என்று ஆங்கிலேயருக்கு அறிவுறுத்தித் தென்னிலங்கையாரைத் தட்டியெழுப்பிப் பின் தொடருமாறு வழிகாட்டிய வள் ளல் மறைந்த நாள்.

நல்ல தமிழ் படிப்பித்து முஸ்லிம் மக்களைக் கொழும் பில் புலமையுள்ளம் கொள்ளச் செய்த வட்டுக்கோட்டை நல்லதம்பிப் புலவர் பிறந்தநாள்.




உலகத்துக்குக் கருத்தாவும் உலகத்தவருக்கு வேண் டுவனவற்றை உபகரித்து புறத்தே போன்றவர்கள் வசை மொழி கூறவும் பொறுத்திருந்து அவர்களை ஓடுமட்டும் ஓடி வெளிவீதிகளில் விளையாடவிட்டு அவர்கள் மீண்டு வரும்போது பிழைபொறுத்து ஆட்கொண்டு அருள்புரியும் ஆனந்த நடராசமூர்த்தம் அபிடேகம் கொள்ளும் ஒரு நாள்.

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)

ஓம் என்பது ஓசைகளுக்கு மூலகாரணம்

## மறைந்தும் மறையாதவர்

சில மகான்கள் மறைந்தும் மறையாமல் இருப்பர். அவர் விட்டுப்போன எச்சங்கள் எமக்குக் கதை பேசும். மகான் சிவானந்தர் விட்டுப்போன ரிஷிகேச தபோவனம் ஆலமர நிழல் போன்றது. அதன் விழுதுகள் மிகப்பல. உலகமளாவிய தெய்வீக சபைகள் சைவ சனுதனம் வளர்க்கின்றன. ஆங்காங்கே சிவமணம் கமழ்கிறது. அது இந்திய நாகரிகமாயினும், இந்து நாகரிகமாயினும் ஆகுக. அது சைவநாகரிகம் என்பதே பேச்சு. சிவ என்னும் ஆனந்தத் திருநாமம் கொண்ட ஆச்சிரமங்கள் இன்று எல்லோரும் வாழ்க என்றே "சமஸ்தலோகான் சுகினோ பவந்து" கூறி ஆசீர்வதிக்கிறது. மகான் சமாதியிலடங்கிய வாறே நல்லன நடக்க ஆவன செய்துள்ளார். உறங்குமாயினும், உயிர்ப்படங்கிய போதிலாயினும் அவர் ஆணை நடக்கும். அவர் வழியில் அகிலமும் சனுதன தர்மத்தைக் கேட்கிறது.



## ஆன்ம தத்துவமாவது எவை?

பூதம் ஐந்து தன் மாத்திரை ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்துடன் சிந்தை, மனம் ஆங்காரம், புத்தி ஆகிய நான்கும், ஆகிய இருபத்திஞன்கும் ஆன்மதத்துவமாம். இதனை பிரகிருதி மாயா தத்துவம் எனவும், போக்கிய காண்டம் எனவும் வழங்குவர்.

## வித்தியா தத்துவமாவது யாது?

காலம், நியதி, கலை, வித்தை அராகம், புருடன், மாயை எனும் ஏழும் வித்தியா தத்துவமாம். இவற்றை 'காலம் நியதி கருதும் கலைவித்தை ஏல அராகம் புருடனேமாயை'' என வரும் செய்யுளால் அறிக. இதனை அசுத்த மாயா காரியம் என்பர். (அராகம்- ஆசை)

## பஞ்சக் கிலேசங்கள் எவை?

அவித்தை, ஆங்காரம், அவா, ஆசை, கோபம் என்பன. இவற்றைத் திருவள்ளுவர் காமம், வெகுளி, மயக்கம் என மூன்றனுள் அடக்குவர். இவை சகலருக்கே உரியவை.

## சுத்த தத்துவமாவது யாது?

சுத்தவித்தை, ஈசுரம், சதாசிவம் சத்தி சிவம் என்னும் ஐந்துமாம். இதனை, "சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம் நற்சத்தி சிவம் காண் அவைகள் தாம்'' என வரும் செய்யுளடியால் அறிக.

## பஞ்ச கஞ்சுகங்கள் எவை?

கஞ்சுகம் என்றல் சட்டை என்று பொருள். அவை ஆன்மாவுடன் நின்று உபகாரப் படுவனவாதலால் கஞ்சுகம் எனப்பட்டன. அவை கலை, வித்தை, அராகம், காலம், நியதி எனும் ஐந்துமாம்.

## ஊன நடனமாவது யாது?

உயிர்களுக்கு பிறப்பை விளையச்செய்து பக்குவப்படுத்துவது ஊன நடனமாம். இது நகார மகாரங்களை முன் உடையது.

## ஞான நடனமாவது யாது?

சிகார வகாரங்களை முன் உடைய நடனம் ஞான நடனமாம். இது மோட்சத்தை உபகரிக்கும் அனுக்கிரகமாம்.

## சிவாயநம என்பதன் பொருள் என்ன

சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் ஆகிய ஐந்தின் உண்மையைக் குறிக்கும் பஞ்சாட்சரமாம். இதுவே பிரதான மந்திரம் திரயி எனப்படும் பிரதான வேதங்களான இருக்கு, யசுர், சாமம் எனும் மூன்று வேதங்களில் நடுவேயுள்ள யசுர், வேதத்தின் ஏழு காண்டங்களுள் நடுக்காண்டத்தில் உள்ள ஏழு சங்கிதைகளில் நடுவேயுள்ள ஸ்ரீருத்திரத்தின் நடுவே பஞ்சாக்கரமாதலால் இதனை வேத இதயம் என்பர்

## பிரமிட்

எகிப்து தேசத்தவரும் பழைய நாகரிகம் அறிந்தவர்கள். வட ஆபிரிக்காவில் நைல்நதியின் நன்கொடை என வழங்கும் எகிப்து நாகரிகம், செல்வச்செழிப்பு அதிகாரம் எல்லாம் அமைந்த நாடு. அங்கே அதிகாரமுள்ள பேரோக்கள் என்னும் அரசர்கள் ஆண்டு வந்தார்கள். எகிப்தை ஆண்ட இராணிகளுள் அழகிற்சிறந்த கிளியப்பெற்று என்பவள் பெருஞ்செல்வாக்குப் பெற்றவள். உரோமானிய தலைவர்களான சீசர், அன்ரனி, ஒக்ராவியஸ் முதலானோரை மயக்கிஅடிப்படுத்திய காதலியாயிருந்தவள் அவள் அவளின் அழகுக்குக் காரணம் அவள் மூக்கு என்பர். வயது அவளை வாடவிட மாட்டாது என்று சேக்ஸ்பியர் அவளைப்பற்றிப் பாடினர். (தமிழர் மூக்கும் முழியும் நன்ருக இருந்தால் அழகிருக்கும் என்று கருதியதும் உண்டு.

எகிப்துக்குப் பெருமை தந்தவை நைல்நதி, பருத்தி விளைவு, பிரமிட் கோபுரம், கூடின உழைப்பு. பிரமிட் என்பது கூர்நுனிக்கோபுரம். அது △ இந்த அமைப்பில் மிகப்பெரிதாயிருக்கும். எகிப்தில் பல பிரமிட் கோபுரங்கள் உள்ளன. அவற்றுள் பெரியதும் பழையதும் ஒன்று. அதை லட்சக்கணக்கானேர் கட்டினர் என்பர்.

மிகப்பெரிய கைவண்ணம் என உலகமெங்கும் புகழப் பெற்ற இந்தப்பெரிய பிரமிட் கோபுரத்தைக் கட்டுவித்தவன் கூபு என்னும் பேரோவாகும். இவனைக் கிரேக்கர் சியோப்ஸ் என வழங்கினர். இவன் இதை கி. மு 2700 ஆம் ஆண்டளவில் கட்டினுன் என்பர். வரலாற்றுப்பெரும் புலவரான ஹொசற்றஸ் இதனை வியந்து எழுதியுள்ளார்.



## இமயத்தின் குரல்

இமயம் உலகிலேயே மிகவுயர்ந்தமலை. இதுபனிமலை, சிவமலை, சைவமலை அசையாமலை. இம்மலையிலிருந்தே பல்வேறு நதிகள் ஊற்றெடுத்து நிலத்தின் கண்ணே சுத்த நீர்ப்பெருக்காகப் பாய்கின்றன. இந்த நதிக்கரைகளில் மிகப்பழைய காலத்து வாழ்ந்து நாகரிகமுற்றுக் கண்டறியாதன கண்டவர்களே சனாதனசமய முன்னோடிகளாவர். ஒரு காலத்தில் தெற்கில் மிகப் பெருமளவில் பரந்திருந்த நிலப்பரப்பு கடற் கோள்களால் விழுங்கப்பட்டபோது வடக்கே சென்றுறைந்தவர்கள் கண்ட நாகரிகமே மிகப் பெரிய பழைய நாகரிகம். மத்திய ஆசிய வெளிகளிலிருந்து கணவாய் வழிகளால் நாடு புகுந்தவர்கள் நாகரிகத்தைக் கண்டு தாமும் நாகரிகமுற்றனர். இங்ஙனமே வரண்ட நிலமெங்குமிருந்தும் வந்தவர்கள் நாகரிகத்தைக் கண்டார்கள்.

இமயமே தந்தை, கங்கையே தாய் என்று கருதித் தம் தந்தைதாயராய இவர்களுக்குச் சிவானந்தர் இந்நூலைச் சமர்ப்பிக்கிறார். சிவதத்துவத்தின் வழி சத்தி தத்துவம் பிறக்கும் என்பது தெளிவாகத் தெரிந்ததே. முந்நூற்று முப்பத்து நான்கு பக்கங்களில் ஆங்கிலவுலகுக்குச் சிவானந்தர் தந்த அறிவுநூல் உபதேசங்களாகவும் ஆலோசனைகளாகவும், கட்டளைகளாகவும் உள்ளன. செய் என்னும் ஏவல்களும், செய்யாதே என்னும் கட்டளைகளும் சைவ உலகத்தைப் பணி கொள்ளுமாறு அமைந்துள்ளன. எது எமைப் பணிகொள்ளுமாறு அவை கேட்குமாறு இங்கே அமைந்துள்ளன. கேட்போமாக.

"Voice of the Himalayas"

## ஞானியர் வரலாறுகள்

தம்பி, தங்கையர்களே! இந்து நாகரிகம் என வழங்குவது இந்தியாவிலேயே உற்பத்தியானது. இது சனாதனமாவது. இது எந்த மூலையில் எந்தக் குகையில், எந்தக் குடிசையில் உற்பத்தியானது என்று ஒருவருமறியார். அன்று எங்கேயோ நாமறியாத ஆலமரத்தடியில் அறிவே வடிவாகத் தென்திசை நோக்கியிருந்த மௌன தவமுனிவர் சொல்லாமற் சொன்ன ஞானம் சனாதன தர்மமாய், சொல்லித்தானாய தர்மமாய், கேட்ட ஞானமாய், கேட்டமையால் சுருதியாய், நினைத்த தர்மமாய், நினைத்த அளவையால் ஸ்மிருதியாய், பின்னர் நினைப்பற நினைத்தவை எதிர் காலத்தவருக்கு வழிகாட்டுவதற்காய் எழுத்துருவில் ஏட்டளவில் மலர்வதாயிற்று.

மாசற்றார் மனத்துளான வணங்கி நாம் இருப்பதால் பேசித்தான் ஆவதுண்டோ பேதை நெஞ்சே என்று பேசாதிருந்த ஞானியரும் பலர். பேசியும் நேசித்த ஞானியரும் பலர்.

இத்தகைய ஞானியர் பலரின் வாழ்க்கை வரலாற்றை தாமே அப்பைய தீட்சிதர் என்னும் ஞானியர் பரம்பரையில் வந்த சிவானந்தர் அற்புதமாக எழுதியவை 300 பக்கங்கள் அளவில் வெளிவந்துள்ளன. சங்கரர் இராமானுஜர், மத்வா, வல்லபர், நிம்பர்க்கர் முதலானவர்களையும் இன்னும் பின்வந்தவர் பலரையும் எழுதியுள்ளார். (இவர்களுள் நீலகண்ட சிவாசாரியரைத் தவிர்த்தெழுதும் வான் முறையில் போலும் இவரும் எழுதவில்லை.)

## இயற்கை மருத்துவம்

சுவாமி சிவானந்தர் "Practice of nature cure" என்னும் தலைப்பில் எழுதிய பெரிய நூல் ஒரு சாதனை. இதனைச் செந்தமிழில் இராசிபுரத்துறவி 584 பக்கமளாவிய நூலாக வெளியிட்டமை மற்றொரு சாதனை. தமிழ்ப் பெயர்ப்பிலும் சிவானந்தக் காந்தம் இரும்பு மனத்தையெல்லாம் இழுக்கின்றது.

## ஓம் சத்குரு பரமாத்மனே நமஹ ஓம்

எங்கும் நிறைந்துள்ள சிகிச்சைதரும் சக்திக்கு, நம்மைப் பாதுகாக்கும் இயற்கை அன்னைக்கு இயற்கை மருத்துவத்தை ஊக்குவிப்போர் பின்பற்றுவோர் அனைவருக்கும் அதுபோலவே பெருமளவில் மனித சமுதாயத்தில் அனைவரும் உடல்நலமும் நீண்ட ஆயுளும் அமைதியும் மகிழ்ச்சியும் பெறுமாறு இன்நூல் அன்புக்காணிக்கை ஓம்

### ஓம்

அமிழ்தத்தின் செல்வா!
உடல் நலமே பெருஞ் செல்வம்
உன் வாழ்வில் உண்மையான
அடித்தளம் உடல் நலமே
வலிமை வாய்ந்த உடம்பை வளர்த்துக்கொள்
இயற்கையுடன் இணக்கம் கொள்
உடல் நலம்பற்றிய உடல்நலநூல்களைப்
பற்றிய விதிமுறைகளைப் பின்பற்றி நடப்பாயாக
உடல்நலம், அமைதி, நீண்ட ஆயுள்
கைவல்யம் ஆகியவற்றை ஆண்டவன்
உன்மீது பொழிவாராக.

சுவாமி சிவானந்தர்

★ யோகமுயற்சியின் முழுப்பயன் ஞானவெள்ளம் ★

## ஆயிற்று, ஆகும்.


பரமேஸ்வரம் என்பது இலங்கையில் உள்ள ஈஸ்வரங்களுள் ஒன்று. இலங்கை சிவபூமி எனப்பெயர் பெற்றது. ஈஸ்வரன்களால் நிறைந்தது. எங்கே தோண்டினாலும் சிவலிங்கங்கள் கிடைக்கும். முன்னர் மகாசேனன் அழித்தவைபோக, பின்னர் போத்துக்கேயர் அழித்தவைபோக எஞ்சியவை ஒருசில. எஞ்சியவற்றுள் காலந்தோறும் புனருத்தாரணஞ் செய்யப் பெற்றவை ஒருசில. இராசராச சோழன் அமைத்த ஈஸ்வரங்கள் பல. இராமநாதன் அமைத்தவை ஒருசில. இராமநாதன் அமைத்த சிவாலயங்களுள் பரமேஸ்வரம் ஒன்று. அதன் முதற் கும்பாபிடேகம் 1928 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அன்றைய சூழல் பரமேஸ்வராக்கல்லூரி. இன்றைய சூழல் ஒரு பல்கலைக்கழகம். காசிப்பல்கலைக்கழகம் சிவாலயச்சூழலில் நிலவுமாப்போல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பரமேஸ்வரச்சூழலில் இயங்குதல் நல்லதுதானே? பரமேஸ்வர பாலஸ்தாபனம் ஆயிற்று. அடுத்து கும்பாபிஷேகம் ஆகும். சிவானுக்கிரகம் பொழிவதாக. பல்வேறுகலை வளம் பொலிவதாக. பரமேஸ்வரம், பரமேஸ்வரம் எனப் பணிவோமாக. சேரவாரும் முந்துபண்டாரம் இங்கே கிடைக்கும். பரமேஸ்வரன் சந்நிதியில் வணங்கியபின்பே பரமேஸ்வராக்கல்லூரி பாடம் தொடங்கிய பாரம்பரியத்தில் நிலவியது.

---

### தணிகாசலம் என்னும் பெரியார்

அவர் குறுகிய தோற்றம் உடையவர். பெரிய சேவை செய்தவர். வெற்றுரவாரம் வீண்பேச்சு எதுவுமின்றிக் கோயிற்பணி செய்தவர். தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் திருவிழா வேளைகளில் பம்பரம் போலச்சுழன்று எல்லா வேலைகளிலும் கைகொடுத்தவர். அவர் இன்று இல்லை, அவர் செய்த நீண்டகாலச் சேவைநிலையாக நிற்கும். அமரராகி அம்பிகையின் திருவடி சேர்ந்த அவர் ஆன்மா சாந்தி பெறுக.

---



### துரைராசசிங்கம்

மாநகரசபையில் நீண்டகாலம் பிரதிநிதியாய், மக்கள் சேவையில் அநுபவங்கண்ட தொழிலாளர் தலைவன். இடதுசாரியியக்கம் வடக்கில் உதயமான 1934, 1935 ஆம் ஆண்டுகளிலேயே இளந்தோழராய்த் தொண்டு புரியத் தொடங்கியவர். தமது வட்டாரத்தைச் சட்டத்தரணி, டாக்டர் முதலானோர் கைப்பற்ற முனைந்தும் விட்டுக் கொடுக்காமல் வென்றமை, மக்கள் உள்ளத்தை நிரப்பிய பெருமையாலாகும். அவர் சேவை பெரிது. அவர் ஆன்ம சாந்தி பெறவாழ்த்துதும்.

### எண்பத்தொன்பது ஆண்டு நிறைவு

சிறுகக் கட்டிப் பெருக வாழலாம். வாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள். வாழ்ந்து வளர்ந்த மனைகள் இருக்கின்றன. மனைகளில் மிகவும் மகத்தான மருத்துவமனை வேலூரில் 1900 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பெற்றது. பெண்கள் மகப்பேற்றுக்கு வசதியில்லாதுமாண்ட வரலாற்றைக் கண்ட அமெரிக்க வள்ளல் ஐடாஸ்கட்டர் என்பார் ஒரு படுக்கை, ஒரு மருத்துவர், ஒருதாதி என்னும் இவர்களுடன் ஆரம்பித்த மனை இன்று பாரிய மருத்துவக் கல்லூரியாக மலர்ந்துள்ளது.

---

### மக்கள் மகிழ்ச்சி

நாட்டுமக்கள் மகிழ்ச்சியோடு கவலையின்றி வாழ்வதையே ஆளும்தலைவர் மனத்திற் கொள்ளுதல் அறம். அறம் தவறியவர் தர்மம் தர்மம் என்றெல்லாம் பேசுதல் அடாது. ஈரான் மன்னர் தமது மனைவியோடும் மைந்தரோடும் ஒரு விமானத்தில் பறந்தார். அவர் நாட்டில் யாராவது ஒருவரை மகிழவைப்பதற்கு 1000 றியால் பணத்தை நிலத்திலே போடவிரும்பினார். ராணி சொன்னார் அந்த ஆயிரத்தையும் 500 ஆக இரண்டு இடங்களில் போடுங்கள் இரண்டு பேர் மகிழ்வார்கள். மைந்தன் சொன்னான் 100 ஆகப் பத்து இடங்களில் போடுங்கள் பதின்மர் மகிழ்வார்கள். இவற்றைக் கேட்ட விமானி நிதானமாகச் சொன்னான், நாட்டவர் எல்லோரும் மகிழ்வதற்கு ஒருவழி அரசே நிலத்தில் குதியுங்கள்.

---

### பின்வருந் தொடர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சொல் தருக

1. பாடுபட்டு வேலை செய்பவன்
2. எதற்கும் அஞ்சுபவன்
3. ஒரு வேலையும் செய்யாதவன்
4. நோயால் வருந்துபவன்
5. அளவுக்கு மிஞ்சிப் பேசுபவன்
6. தாய்க்கு முன் பிறந்த பெண்
7. அறுபது வருடங் கொண்ட காலம்
8. தாமரைப் பூவின் கொட்டை
9. பட்ச பாதம் இல்லாத சொல்
10. கைமாற்றாய் வாங்கியது

1. உழைப்பாளி. 2. பயங்கொள்ளி. 3. சோம்பேறி. 4. நோயாளி 5. வாயாடி. 6. பெரியம்மா 7. பேராண்டு. 8. பொகுட்டு. 9. பொதுச்சொல். 10. மண்டிரவல்.

---

### செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்


ஈழத்துப் புலவர்கள் பரம்பரையினர் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்லர். நிறைந்த புலமையூற்றுள்ள அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒளிவீசிய வரலாற்றில் ஒரு பகுதி விரைவில் வெளிவர இருக்கிறது. முன்னர் தமிழ்தந்த தாதாக்கள் வெளியிட்ட சுடரொளிப் பதிப்பகத்தார், இதனைவெளியிட ஆயத்தஞ் செய்கிறார்கள்.

---

★ தொண்டனாகப் பணிபுரிந்தால் முன்னேறுவதற்கு வழி ★

## மீண்டும் நினைவு படுத்துகிறோம்

இம்முறை எமக்குப் பெருமளவிலான வேப்பம் விதைகளும் இலுப்பை விதைகளும் தேவை. நல்ல விலை தரலாம். பெருமளவில் தருபவர்களிடம் நாம் வாகனம் அனுப்பி எடுத்துக்கொள்வோம் - விண்ணப்பஞ் செய்யுங்கள். மில்க்வையிற் தொழிலகம் தபாற்பெட்டி 77 யாழ்ப்பாணம்.



## பண்டிதமணி அவர்கள் நினைவு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைப் பெரியவர்களும் இளம் தலைமுறையினரும் மறக்கமாட்டார்கள். ஒப்படை தயாரித்த காலத்தில் குழந்தைகள் ஓடித்திரிந்து அவரைப் பற்றி நன்றாக அறிந்தார்கள். அவரை உருவாக்கிய பெரிய மனிதர்கள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் நல்லூர் கைலாசபிள்ளை. அவருக்கு உதவிசெய்த பெரியவர்கள் இருவர் தென்கோவைப் பண்டிதர் கந்தையாபிள்ளை கந்தமடம் சாமிநாத பண்டிதர் அவர்கள், அவர் விரும்பிப் படித்த பெரிய நூல்கள் இரண்டு. கம்பராமாயணம், கந்தபுராணம். அவர் பெரிதும் மதித்த பெரியவர்கள் இருவர். குப்பிளான் செந்திநாதையர், அளவெட்டி கைலாயபதி அவர்கள். அவர் பெருமையறிந்த பல்கலைக் கழகங்கள் பேராதனை, யாழ்ப்பாணம். அவர் வளர்த்த கலாபீடங்கள் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கலாநிலையம். அவர் சுவைத்துப் பேசிய புலவர்கள் சின்னத்தம்பிப்புலவர், முத்துக்குமார கவிராயர். அவர் விரும்பிய பெண்கள் சீதை, வள்ளிநாச்சியார். அவர் இறுதி மூச்சுவரை கைவிடாத துறை சைவம் தமிழ். அவரிடம் குடி புகுந்த ஆற்றல் பேச்சாற்றல். எழுத்தாற்றல். அவரை இறுதிவரை விட்டுப்போகாதவை நகைச்சுவை, கிண்டல்.

## உங்கள் ஊரின் புதினம் என்ன?
## உள்நாட்டுச் செய்தி என்ன?

அவையா? சொல்லுகிறோம் கேளுங்கள். சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார், கோயம்புத்தூர் தந்த பெரிய சட்டத்தரணி சைவப்பெரியார், பெரிய புராணப் பித்தர், பெரியபுராணத்துக்குப் பல்லாயிரம் பக்கங்களில் அகலவுரை எழுதிய அறிவாளி. முதுமையில் துறவுபூண்டு மதுரைத்திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சம்பந்தர் சரணாலயர் என்னும் திருநாமம் பூண்டு தம்பிரானாயிருந்து சமாதியடைந்தவர்.

அவர் இளமையில் இணுவில் வைத்திலிங்கம் என்னும் இயற்றமிழாசிரியரிடம் படித்தவர். பின்னர் இலக்கணம் சுவாமி என்னும் முத்துக்குமாரத் தம்பிரானிடம் சமயம் பயின்றவர். தம்பிரான் சுவாமிகள் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர், ஈழநாடு பத்திரிகை தந்த தங்கராசா அவர்களின் தாய் மாமனார். சுப்பிரமணியம் முதலியாருக்குச் சிவக்கவிமணி பட்டம் கொடுத்த சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க விழாவில் தலைமை தாங்கியவர் சு. நடேசபிள்ளை.

## பிற்காலப் புராணங்கள் சில

1. திருவாடனைப் புராணம்
   வ. ச சண்முகம்பிள்ளை
2. திருக்குட்வாயிற் புராணம்
   வ. சு. சண்முகர்பிள்ளை
3. கண்டியூர்ப் புராணம்
   வ. சு. சண்முகம்பிள்ளை
4. கோகர்ணத்தலபுராணம்
   வ. சு சண்முகர்பிள்ளை
5. சிதம்பரபுராணம்
   புராணத்திருமலைநாதர்
6. திருவான்டியூர்ப்புராணம்
   பூவை-கலியாணசுந்தரமுதலியார்
7. திருவுசாத்தானபுராணம்
   சொக்கலிங்கச் செட்டியார்
8. திருப்புத்தூர்ப்புராணம்
   சொக்கலிங்கச் செட்டியார்
9. தண்டபாணியடிகள் புராணம்
   சொக்கலிங்கச் செட்டியார்
10. காரமடைத்தலபுராணம்
    கந்தசாமி அடிகள்
11. அன்னியூர்த்தலபுராணம்
    கந்தசாமி அடிகள்
12. உடையார் பாளையத்தலபுராணம்
    கனகசபைக் கவிராயர்

★ பொது நலன் கருதுபவனே மேலான செல்வன் ★

(4 ம் பக்கத்தொடர்ச்சி)



உலகுக்கு அன்னையும் அப்பனுமாய் உமாமகேஸ்வரராய் எழுந்தருளியவர்களுக்கு அடியார்கள் விரும்பி விரதமனுட்டிக்கும் நாள்.

தென்னிந்தியா என வழங்கிய மாநிலத்தை எத்திசையும் புகழ்மணக்குமாறு தமிழ்நாடுஎனப் பெயர்வைத்த பெரியவர்களுள் ஒருவராய அறிவால் அண்ணுவான அண்ணுத்துரை தோன்றிய நன்னுள். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இன்றமிழ் பயின்று பெரும் பேராசிரியர்களாக வீற்றிருக்கின்ற எங்கள் தமிழறிந்த பெருமாள்களின் முன்னேடிகளை உருவாக்கிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களை உருவாக்கிய இலக்கணம் கந்தசாமிப் பிள்ளையை உருவாக்கிய சோழவந்தான் அரச சண்முகனுர் என்னும் பெரும் புலவர் தோன்றியநாள். கொழும்பில் பிரபல வைத்தியராயிருந்து அரியமுறையில் சமூகசேவை செய்த பெருமகனுர் குமாரன் இரத்தினம் அவர்கள் நினைவு நாள்,




மாகாண சத்திர வைத்தியர் என்பதை ஆங்கிலத்தில் புறவின்சல் சேர்ஜன் என்பர். சுருங்கச்சொன்னுல் பி. எஸ் என்று இரண்டெழுத்தில் சொல்வர். இந்தத் தொழில் பார்த்த மனிதாபிமானி மனிதருள் தெய்வம் சுப்பிரமணிய டாக்டர் தினம்.

தாய்ப்பாலுக்கு அடுத்தாற்போல் பசுப்பால். பசுப்பாலைப் பதங் கெடாமல் பாதுகாக்கும் பேஸ்ரறை சேசன் முறையைத் தம்பெயர் நிலவத்தந்த லூயபேஸ்ரர் என்னும் நிபுணன் நினைவு நாள்.

இன்று உலகப் புகழ்பெற்று வருகின்ற சைவசித்தாந்தம் தமிழர் சிந்தனை இதுவழியாக எத்தனையோ சிந்தனைகள் வந்துள்ளன. இன்று இந்து நாகரிகம் என வழங்குவதை இந்திய நாகரிகமோ? இந்து நாகரிகமோ என இலங்கையில் மேலிடத்தார் ஆராய்வதற்கும் முற்படுகிறுர்கள். நல்ல முயற்சி. வெற்றி உண்டாகுக. எவர்கள் எதை ஆராய்ந்தாலும் முடிந்த முடிவு ஒன்றுண்டு அந்த முடிந்த முடிபையே சித்தாந்தம் என்பர். அது சைவமாம் சமயஞ் சார்ந்தமையின் சைவசித்தாந்தமாயிற்று. இந்தச் சைவசித்தாந்தத் திறனைப் பாரிய இரு நூல்களில் தந்த சகலாகம பண்டிதர் சதாசிவ ஆச்சாரியார் என்றெல்லாம் புகழ்பெற்ற அருணந்தி சிவாசாரியர் ஆவர். அவர் சிவத்தைச் சேர்ந்த நாள்.

சுத்தசைவர் எல்லோரும் இந்நாளைக் குருபூசை நாளாகக் கொண்டாடுவர். தமிழ்நாட்டிலே சிதம்பரத்தலத்திற்கு அருகேயுள்ள திருவேட்களம் என்னும் திருத்தலத்திலே தமிழ் மயமான இசைமயமான ஒரு பென்னம் பெரிய பல்கலைக்கழகத்தைத் தந்த செட்டி நாட்டரசர் இராசா - சேர் அண்ணுமலைச் செட்டியாரைத் தந்த செப்ரம்பர் மாதமே! நீவாழ்வாயாக.

கோப்பாய்க் கோமான் என்று பெயரெடுத்துத் தமிழை முன்வைத்து ஓர் அரசியற்கட்சியை உருவாக்கிக் கட்டிக்காத்த தெல்லிப்பழையூர் அறிஞன் குமாரசுவாமி தந்த வன்னியசிங்கம் அப்புக்காத்தர் தினம்.



புலத்துறை என்னும் அறிவுத்துறை நிரம்பிய மேற்குப் புலோலி சைவம் வளர்த்த சான்றேர், மேதை, பெரும் புலவர் நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் உருவாக்கிய தமிழ்ப்பேராசான், மக்கள் தலைவன், தமிழ்ப்பெரியார் தமிழ்த்தென்றல் திருவாரூர் வி. கலியாணசுந்தரனுர் தினம்.

உலகமளாவிய ஐக்கிய நாடுகள் தாபனத்தைச் சில ஆண்டுகள் கட்டிக்காத்துப் பெரிய முகில்கள், முட்டிமோதிப் பேரிடி மின்னல் உண்டாகாதவாறு தடுத்து வந்த பொதுச்செயலாளர் நாயகம் ஹமர் செல்ட் நினைவுநாள்.

வடமொழியைக் கலக்காமல் தனித்தமிழிலும் பேசலாம் எழுதலாம் என்னும் ஓர் இயக்கத்தை ஆரம்பித்து

(தொடர்ச்சி மறுபக்கம்)

( 9ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திவிட்டுச் சென்ற வேதாசலம் என்னும் மறைமலை அடிகளார் தினம்.

சேர். இராமநாதன், நடேசபிள்ளை ஆகியோர்மூலம் தமிழர் பெருமையை அறிந்தமையோடு அரசாங்க சபையிலும், பாராளுமன்றத்திலும் பல்லாண்டுகள் கல்வி மந்திரியாயிருந்து நல்லவை சிலவற்றைத் தந்த கன்னங்கரா அவர்கள் மறைந்த நாள்.

உலகமளாவிய ஆங்கில மொழியை ஆங்கிலேயரே வியக்கும் வண்ணம் அட்சரசுத்தியாய் ஆற்றோட்டம்போல அமைதியாய் மணிக் கணக்காகப் பேசியவரை கேட்டு மகிழ்ந்த வெள்ளைக்காரர் நாணிக்கோணி கூசிக்குறுகி "எப்படி ஐயா நீங்கள் இப்படி அழகாகப் பேசுகிறீர்கள்" என்று கேட்க, "அதுவா தமிழனுடைய எனக்கு மூவாயிரமாண்டுக் காலத்துக் கலாச்சாரம் பிடரியைப் பிடித்து முன்னுக்குத் தள்ளுகிறது" என்று பேசிய கனம் சிறீனிவாசசாஸ்திரியார், தமக்கு ஆங்கிலம் வரச்செய்த ஆசான் யாழ்ப்பாணத்துத் தமிழறிஞன், கும்பகோணம் கல்லூரி அதிபர் யேம்ஸ் ஹென்ஸ்மன் என்றும் சொன்னவர். அந்த சிறீனிவாசசாஸ்திரியார் பிறந்த தினம்.

தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை எனப்புகழ் பெற்ற சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை அவர்களைச் சென்னையில் அன்பாதரவோடு உபசரித்து வந்த பெரும் குடும்பத்தில் தோன்றி பல நாடகங்களை எழுதியும் நடித்தும் யாழ்ப்பாணம் வந்து நாடகக் கலையை வளருங்கள் என்று ஆலோசனை கூறிப்போன பம்மல்சம்பந்த முதலியார் பத்மபூசணப்பட்டம் பெற்ற வித்தகர் நினைவுநாள்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா என்று பாடிய வாயால் ஓட்டைப்பானைக்கும் சுண்டெலிக்கும் பாடியதோடு, ஆசியசோதி உமர்க்காயம் முதலாய காவியங்களையும் ஓசைபெற்றுயர்ந்த தமிழ்நடையிலே துள்ளித்திரியும் பள்ளிப் பாலருக்கும் பாடிய பெரும் கவிஞர்மணி தேசிகவிநாயகம்பிள்ளை நினைவு நாள்.

## இசை மழை பொழியும் தமிழ் நகரம் பாரதத்தின் கலாசாரத் திருநகரம்

பாரதநாட்டின் பழம்பெரு நகரங்களான கற்கத்தா, பம்பாய், சென்னை என்னும் மூவிடங்களுள், தமிழ் மயமான சென்னை இசைமயமான பண்ணைகள் நிறைந்த பெருநகரம். சென்னையில் செழித்தோங்கிய இசைப்பண்ணைகள் பல. அவற்றைக் குறிப்பிடும்போது, மியூசிக் அக்கடமி, தமிழிசைச்சங்கம், ஸ்ரீகிருஷ்ணகானசபா, இந்தியன்பைன் ஆட்ஸ், மயிலாப்பூர்பைன் ஆட்ஸ்கிளப், தியாகப்பிரம்ம கானசபா, பண்பாட்டுக் கழகம், கலாரசனை என்பனவும் பிறவும் ஏழிசைச் சூழலமைந்த இன்னிசை மன்றங்கள். இம்மன்றங்களின் மேடையேறியவர்களுக்கு மிகப்பெரிய கௌரவம் உண்டு. மார்கழிமாதம் திருவாதிரை நாள் வரப்போகும் வைபவத்தைப் பக்தர்கள் கருதியிருப்பதைப்போல, மார்கழி மாத இசை விழா நாள்களைக் கருதியிருப்போர் இசைப்பிரியர்கள். நாத வெள்ளம் கங்குகரையின்றிக் காற்றிலே மிதந்து காதுகளின் வழியாகப்புகுந்து நெஞ்சை அள்ளிக்கொண்டு போகும். அதற்கு அணைபோட எந்த எஞ்ஜினியராலும் முடியாது, அங்கெல்லாம் முதல் வரிசையிலமர்ந்து கேட்டு மகிழ்ந்து பாராட்டிவந்த பெரியவர் ஒருவர் சுப்பையா நடேசன். அவர் செய்த முயற்சிதான் இராமநாதன் மியூசிக்அக்கடமி.


அர்த்த மத்சி யேந்திராசனம்



முதுகை முறுக்கினால்
முதுமையைப் போக்கலாம்
25 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி
யோகாசன விளக்கப்படத்தையும்
புத்தகத்தையும்
பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
தங்கள் சேவை நாட்டுக்குத்தேவை

மில்க்வைற் - யாழ்ப்பாணம்
த. பெ. இல 77. — தொலைபேசி: 23233

No washing is complete without
Milk White Blue Soap
Milk White Products are
successful choice everywhere


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியா: திரு. க. சி. குலரத்தினம். 1 - 9 - 1989